உ

சிவராமஜெயம்.

14.

# மூடமதிதிரவுகோல்.

இஃது,

சிறுமணவூர்,

## முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

1905.

17

உ

கடவுள் துணை.



# மூடமதி திரவுகோல்.

வெண்பா.

இத்தொழிலைச்செய்தாலும் யேதவத்தைப்பட்டாலும்
முத்தர்மன மிருக்கு மோனத்தே வித்தகமாய்
காதிவிளையாடியிருகைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தேதான்

விருத்தம்.

ஏதப்பா பெண்டீரா லாவதென்ன
ஈன்றெடுத்த பிள்ளைகளாலாவதென்ன
கோதப்பாவிந்துவினா லாவதென்ன
கொண்டதினால் கொடிப்பதினாலாவதென்ன
வாதப்பாசொல்லிநித்தம் அலைந்தேதேடும்
மகத்தான திரவியத்தா லாவதென்ன
போதப்பா போதமென்ற போதம்பார்த்தால்
பொருளுனக்கு லாபமுண்டு புகழ்ந்துகொள்ளே

# மூடமதி திரவுகோல்.

## சிந்து பல்லவி.

கருமம்விடாது பூர்வஜென்மத்தில்நீசெய்த
பாவம்விடாது ஒருவர்க்குநீசெய்த
தோஷம்விடாது

## அநுபல்லவி.

சிரசைமழுங்கடித்து ஸ்தலமெல்லாந்திரிந்தாலும்
தாடிசடைவளர்த்து குருவென்று அலைந்தாலும்
இரவும்பகலும்ஜெப மாலையையிழுத்தாலும்
ஈசனுன்தலையிலே யெழுதினபடியல்லால்-கருமம்

## சரணங்கள்.

காலைமாலைமூன்று வேளையுங்குளித்தாலும்
கட்டாகவிபூதி பட்டையாயடித்தாலும்
தாளைத்திறக்காமல் மந்திரம்படித்தாலும்
தலையிலேநான்முகன் யெழுதினபடியல்லால்-கருமம்

காவடிதூக்கிநீ காசிக்குப்போனாலும்
கண்மூடிவாய்மூடி மௌனமாயிருந்தாலும்
தேவாலயங்கட்டி திருவிழாசெய்தாலும்
தீக்கோட்டைநடுவிலே யேகம்வளர்த்தாலும்-கருமம்

தீர்த்தமுழுதுங்கண்டு ஸ்தானங்கள்செய்தாலும்
தெரியாமல்குகைக்குள்ளே திருடன்போலிருந்தாலும்
பார்த்தவர்பிரமிக்க வேடங்கள்பூண்டாலும்
பகலும்இரவும்தினம் விரதங்களிருந்தாலும்-கருமம்

கஞ்சாவபினிதின்று கஷாயம்பூண்டாலும்
காடேகநித்தியமென்று மரவுரிதரித்தாலும்
தஞ்சமாய்குருவடி பணிவிடைசெய்தாலும்
தன்னையறியவென்று மலையேறிப்போனாலும்-கருமம்

ஊசினுட்டிசாலை ஊன்றிக்கொண்டிருந்தாலும்
யோகத்தடியின்மீது சவம்போலேகிடந்தாலும்
பேசாமல்மலையேறி பெருந்தவம்செய்தாலும்
பெண்டுபிள்ளைகளென்ற சிந்தையைமறந்தாலும்-கருமம்

## மூடமதி திரவுகோல்

திருப்பதிமலையேறி தலைமொட்டையடித்தாலும்
ஸ்ரீரங்கம்தனிற்சென்றும்தெருவெல்லாம்புரண்டாலும்
விரிதலைகொண்டாலும் வேதத்தைப்படித்தாலும்
விட்டோடுஆவியை தாவிப்பிடித்தாலும்-கருமம்

அக்கிபந்துப்பண்ணி அனலுக்குள்ளிருந்தாலும்
அல்லாமல்செலத்திலே தெப்பம்போல்மிதித்தாலும்
திக்கெட்டுதிசைகட்டி சித்துகள்ஆடினாலும்
தீண்டினபொருளெல்லாம்பொன்னாகச்செய்தாலும்-கருமம்

காளிகூளிகளெல்லாம் வசியமாய்போனாலும்
காட்டேரிசாத்தானை யேவலாய்கொண்டாலும்
யாளிபோல்ஆகாசக் குளிகையேகற்றாலும்
யாருக்கும்தெரியாமல் உருமாரித்திரிந்தாலும்-கருமம்

துளசிமணியைக்கோத்து தாவடம்பூண்டாலும்
தூங்காமல்சிலநாளைக் கருக்கண்டம்பூண்டாலும்
அளவற்றமந்திரம் ஆத்தோரஞ்செபித்தாலும்
அன்னமும்சொர்னமும் அள்ளிபிணைத்தாலு-கருமம்

யில்லல்லாவென்றுநீ யெழுகடலலைந்தாலும்
யில்லாமல்ரகிமானை மரவாமல்தொழுதாலும்
வல்லவன்யேசென்று வாய்கொண்டுஅழுதாலும்
வரட்டுத்தவளைபோலே. பைபிளைபடித்தாலும்-கருமம்

தன்னையறிந்தாப்போல் சன்யாசம்பூண்டாலும்
தானேசகலமென்று வாயாடித்திரிந்தாலும்
பொன்வெள்ளிசெய்தாலும் புசியாமலிருந்தாலும்
போதிக்குங்குருவென்றுமடத்துக்குளிருந்தாலும்கருமம்

உலகத்தில்வெகுபேடி மூடமதிகளுக்கும்
உண்மையொன்றில்லாத போய்யற்கும்பேயற்கும்
சகலர்க்குந்தெளிவாக சிறுமணவூர்முனிசாமி
சாற்றியதிரவுகோல் பாராதபெரியோர்க்கும்-கருமம்





சிவமயம்.

# சிவவாக்கியம்.

காணவேணுமென்றுநீர் கடல்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ அறிவில்லாமூடரே
வேணுமென்றயீசர்பாதம் மெய்யுளேவிளங்கினால்
காணலாகும்நானைக் கடந்துநின்றசோதியை 1

ஓடியோடியோடியோடி உட்கலந்தசோதியை
நாடிநாடிநாடிநாடி நாங்களுகழிந்துபோய்
வாடிவாடிவாடிவாடி மாண்டுபோனமானிடர்
கோடிகோடிகோடிகோடி யெண்ணிறந்தகோடியே. 2

தூர தூர தூர மென்றுசொல்லி யோடும்வீணரே
பாரும்விண்ணும்யென்றுமாய்பரந்து மெய்ப்பராபரம்
ஊருணாடுகாடுபோயுழன்று தேடவேணுமோ
நேரதாகவும்முளே நினைத்தறிந்துகொள்ளுமே. 3

நட்டுவைத்ததேவரும் நாடாமல்வைத்ததேவரும்
சுட்டுவைத்ததேவரும் சுடாமல்வைத்ததேவரும்
கட்டிவைத்தபுத்தகக் கதைகளின்புரட்டெல்லாம்
பெட்டதால்முடிந்ததே பிராணையானடுந்தபின். 4

நட்டகல்லைதெய்வமென்று நாலுபுட்பம்சாற்றுறீர்
சுற்றிவந்துமொணமொணென்று சொல்லுமந்ரமேதடா
நட்டகல்லும்பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டிசட்டுவம் கரிச்சுவையரியுமோ. 5

ஓசைபெற்றகல்லைநீ உடைத்துருக்கள் செய்குறீர்
வாசலில்பதித்தகல் மழுங்கவுமதிக்கிறீர்
பூசைபெற்றகல்லிலே பூவும்நீறும்சாற்றுறீர்
யீசனுக்குகந்தகல்லிரண்டுகல்லுமல்லவே 6

பண்டுநான்பறித்தெரிந்த பண்மலர்களெத்தனை
பாழிலேஜெவித்துவிட்டமந்திரங்களெத்தனை
மிண்டநாய்திரிந்தபோ திரைத்தநீர்களெத்தனை
மீளவும்சிவாலயங்கள் சுத்திவந்ததெத்தனை
அண்டர்கோனிருப்பிடம் அறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோவில்தெய்வமென்று அறிந்துணர்ந்தமுனிகள்
கண்டகோவில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே. 7

விருத்தம்.

எத்தனைதான்கல்லுகளைப்புசித்தாலும்
ஈனர்களேஉங்களுக்கு மோட்சமுண்டோ.
சுத்தமுடன்தலைமுழிகித் தவஞ்செய்தாலும்
சொல்லரிபேரின்பந் தோன்றுமேதான்
பித்தர்களேகல்லுகளை விலைக்குவாங்கி
பிறனென்றேசிலையிலே முடிந்துகொண்டு
செத்தபின்பு கயிலாயம்சேர்வோமென்றால்
சேர்வதில்லை அருனகரம்சேர்வீதானே. 1

சற்குருவை அரியாமலுலகிலேதான்
சண்டாளக்கல்லுகளைத்தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்னபுத்திதன்னைக் கேட்டுப்
பூசைசெய்துகல்லுகளைப்போற்றிசெய்வார்
சொற்குருககள்தங்களுடசெய்திகேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமல்லால்சொல்லும்போது
சற்குருவை அறிந்தவருக்குடனேமோட்சம்
சார்வதென்றே முன்னோர்கள்சாற்றினரே. 2

கரும்பேய்கள் சுரப்பேய்கள் காமப்பேய்கள்
கனகத்துப் பொருட்பேய்கள் வசனப்பேய்கள்
மருட்பேய்கள் மனப்பேய்கள் வசனப்பேய்கள்
வண்மையில்லாக்குப்பேய்கள் வாதுகூறும்
இருட்பேய்கள் சமயமதமேற்றும்பேய்கள்
இயலாதமந்திரங்க ளோதும்பேய்கள்
குருப்பேய்கள் தங்களுடபெருமைதன்னை
குவலயத்தில்கூறுவது குற்றந்தானே. 3

தன்னைத்தானறியாத மூடரெல்லாம்
தானுலகில்குருக்களென்றுபெயரும்சொல்வார்
பின்னைத்தான்பிறவாத னெறியுங்காணுற்
பேசாதமந்திரத்தின்பெருமைகாணர்
முன்னைத்தான்பெரியோர்கள்சொன்னநூலில்
முறைமைதனை யறியார்கள்மூடரெல்லாம்
என்னத்தான்சீஷருக்கு முத்திகாட்டி
ஈடேரக்கெடுப்பதுவு மியல்வில்லாரே.

அடியற்ற மரம்போலே தெண்டனேது
அரகராவென்னமொழிக் கர்த்தமேது
பிடிபட்டகள்ளரைப்போல் கும்பிடேது
பேசாமல்பற்பலவாய்பினத்தலேது
கொடியிட்டமரத்துக்கு சுரங்கலேது
கும்பிட்டகோயிலுக்கு குரியங்களேது
வடிவற்றதிருவருளை மனதில்வைத்தால்
வண்மையுடன்பரமபதம் வாழலாமே. 5

உ

கடவுள் துணை.

பின்முடுகு ஆனந்தக்களிப்பு.

---

மனைவியே எனைக்கொல்லும் யெமனடா
அவள் எமனடா னமனடா
பேயடா பூதண்டா — மனைவி

கையிக்கிவளையலென்று மாட்டுவாள்
அவள் கலையென்பாள் பணியென்பாள்
தலைக்கெண்ணை தாவென்பாள் — மனைவி

உண்டிக்கேதினம்தினம் வாட்டுவாள்
நல்லவுடையென்பாள் படையென்பாள்
நடையென்பாள் பிடமென்பாள்
பிள்ளையே உன்காலில் விலங்கடா
அதுவிலங்கடா கயரடா
வலையடா உலையடா — மனைவி

உரவே உனைவாட்டும்புலியடா
சுனையடா மலையடா
பணமே உனைவெட்டும் கத்தியடா
அதுகத்தியடா கத்தியடா
உளியடாவாளடா — மனைவி

ஶ்ரீ மதி திரவுகோல்.

முற்றிற்று.